மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 183/2022</u>

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கணேசமூர்த்தி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>05.02.2025 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி மணிவாசகம் தான் என்னை சாட்சியும் அளிக்க அழைத்து வந்துள்ளார் என்றால் சரிதான். வாதி எனது உடன்பிறந்த அண்ணன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் வெள்ளகோவில் கிராமம் கரட்டுப்பாளையம் காளிமூப்பன்பதி என்ற இடத்தில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி மணி தாவா சொத்தில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல அவர் தாவாசொத்திற்கு மேல் புறத்தில் குடியிருந்து வருகிறார். காளிமூப்பன்பதி என்பது தாவா சொத்தை தான் குறிக்கும் வேறு இடத்தை குறிக்காது என்றால் சரிதான். நாச்சிமூப்பன் என்பவருக்கு வள்ளியம்மாள் மற்றும் ராமாயி அம்மாள் என்ற இரு மனைவிகள் என்றால் ஆமாம். மேற்படி நாச்சிமூப்பன் என்பவருக்கு

முதல் மனைவி வள்ளியம்மாள் மூலமாக சின்னப்ப நாடார் என்ற மகன் உண்டு என்றால் சரிதான். சின்னப்ப நாடாருக்கு பெரியம்மாள் என்ற ஒரே பெயரில் இரண்டு மனைவிகள் என்றால் அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

2. மேற்படி சின்னப்ப நாடாரின் முதல் மனைவி பெரியம்மாளின் வாரிசுகள் தான் பிரதிவாதி மணி மற்றும் பொன்னுசாமி, கண்ணம்மாள், பாப்பாத்தி ஆகியோர்கள் என்றால் ஆமாம். இரண்டாவது மனைவி மூலமாக பாப்பாத்தி என்கிற சரசு மற்றும் சண்முகம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் ஆமாம். சண்முகம் இறந்துவிட்டார் என்றால் சரிதான் அவரது வாரிசுகள் தான் காமாட்சி, சிவபாலன் நதியா என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை மேற்படி நாச்சி மூபன் என்பவரின் இரண்டாம் மனைவியை இராமாயி அம்மாள் எனது தாய் வழி பாட்டி என்றால் சரிதான். மேற்படி இராமாயி அம்மாள் என்பவருக்கு எனது தாயார் வீரம்மாள் பழனிச்சாமி மற்றும் தங்கமுத்து ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். வீரம்மாள் தற்போது உயிருடன் இல்லை என்றும் மேற்படி வீரம்மாளின் வாரிசுகள் தான் நானும் வாதியும் மற்றும் ஒரு சரோஜினி ஆகியோர்கள் என்றால் சரிதான். 06.10.1945 தேதியில் தாவா சொத்தை எனது தாய் வழி பாட்டி இராமாயி அம்மாள் கிரையம் பெற்றதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான் அந்த கிரைய ஆவணம் பற்றி எனக்கு நேரில் எதுவும் தெரியாது என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் கண்டுள்ள வாசகங்களை நான் படித்துப் பார்த்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் படித்துள்ளேன் தற்போது சரியாக ஞாபகம் இல்லை. அந்த ஆவணத்தில் போக்கியத்தை நீக்கிவிட்டு சுவாதீனம் பெற்றுக்கொள்ள

வேண்டியது என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை ராமாயி அம்மாள் மற்றும் நாச்சிமுப்பன் ஆகியோர் தாங்கள் இறக்கும் வரை ஒன்றாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் ஆமாம்.

3. 05.09.1968 செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் எனக்கு சிறுவயதாக இருந்ததால் அதைப் பற்றி நேரில் தெரியாது என்றால் சரிதான் ஆனால் அதை பற்றி தற்போது எனக்கு தெரியும். அந்த ஆவணத்தில் கண்டுள்ள சாட்சிகளுக்கு தான் செட்டில்மென்ட் ஆவணத்தின் அடிப்படையில் சுவாதீனம் கொடுத்த விபரம் தெரியும் என்றால் சரிதான். நான் தற்போது கரூர் மாவட்டம் திருக்காட்டு துறை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். என் அப்பா காவல்துறையில் பணியில் இருந்ததால் நான் திருச்சி மாவட்டத்தில் பிறந்து வளர்ந்தேன் பின்பு பல ஊர்களில் குடியிருந்தோம் பின்பு சொந்த ஊரான கரூர் மாவட்டம் திருக்காட்டு துறை கிராமம் கரை பாளையத்திற்கு வந்து வசித்து வருகிறோம். நானும் என் தாயாரும் தாவா சொத்தில் குடியிருந்தது கிடையாது என்றால் ஆமாம் என் தாயார் அவ்வப்போது வந்து சாகுபடி செய்துவிட்டு செல்வார். தாவா சொத்தில் தெற்கோட்டில் மேற்கோடாக ஒரு வீடு உள்ளது என்றால் ஆமாம். அந்த வீட்டில் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை வாதி தான் வசித்து வருகிறார். தாவா சொத்தில் உள்ள வீட்டில் என் தாயார் குடியிருந்ததற்கான வரி விதிப்பு எதுவும் அவர் மீது ஏற்பட்டதில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் என் தாயார் சாகுபடி செய்துவிட்டு போனார் என்பதற்கு என் தாயார் பெயரில் சொத்து வரி ரசீதுகள் எதுவும் இல்லை என்றால் அது எனக்கு

ஞாபகம் இல்லை. வாதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டதற்கு பின்பு இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை தாவா சொத்துக்களை பொறுத்து வாதி பெயரில் எவ்வித வருவாய் துறை ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தானது முன்பு ரீ.ச.எண்.1184/14 ஆக இருந்து வந்து பின்னிட்டு 1184/14 ஏ, பி, சி, டி, இ என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஏ,பி,சி,இ என்று மட்டுமே உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணம் ரீ.ச.எண்.1184/14 ஏ,பி,சி,இ –க்கான பட்டா என்றால் சரிதான். மேற்படி பட்டாவானது நாச்சிமுத்து நாடார் மகன்கள் சின்னப்ப நாடார், பழனிச்சாமி நாடார் மற்றும் வீரம்மாள் ஆகியோர்கள் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கான பட்டா உள்ள விவரம் வாதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்பே எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் தாவாசொத்தை பொறுத்த உட்பிரிவு எண்கள் குறித்து குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. ரீ.ச.எண்.1184/14 டி உட்பிரிவைப் பொறுத்து பிரதிவாதியின் தகப்பனார் சின்னப்ப நாடார் பெயருக்கு மனை வரி தோராய பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ரீ.ச.எண்.1184/14 டி என்பது தான் தாவா சொத்தின் தென்மேற்கு மூலையில் உள்ள வீடு என்றால் அது இல்லை. மேற்படி வீடு என்ன உட்பிரிவில் உள்ளது என்பதை குறித்து என்னால் சொல்ல முடியுமா என்றால் அது எனக்கு தெரியாது. நானோ வாதியோ என் தாயாரோ தாவாசொத்திற்கு ஒருபோதும் வந்ததும்

இல்லை தாவா சொத்தின் சுவாதீனத்தில் ஒருநாளும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. பாதி நிழலி கிராமம் வஞ்சிப்பாளையத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் தாவாசொத்திற்கும் வருவார் வஞ்சிபாளையம் இருப்பார். பிரதிவாதி தான் தாவா சொத்தில் குடியிருந்தும் தறி போட்டு அனுபவம் செய்தும் வருகிறார் என்றால் சரியல்ல.

5. பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வரும் தாவா சொத்தை அவரிடம் இருந்து அபகரிக்க வேண்டி பொய்யாக தான செட்டில்மெண்ட் ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்து எனது சகோதரரான வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மாமா பழனிச்சாமி என்பவர் என் தாயார் மீது காங்கேயம் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கேட்டு அசல் வழக்கு எண். 243/2018 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கில் வழக்கு சொத்தாக தாவா சொத்தும் சேர்க்கப்பட்டு அதில் என் தாயாருக்கு ¼ பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நான் என் சகோதரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.02.05 18:40:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்